<u>செய்தி வெளியீடு</u>

செ.வெ. எண். 13 நாள். 12.12.2017

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, வாக்காளர்களுக்கு புகைப்பட வாக்காளர் சீட்டு வழங்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, வாக்காளர்களுக்கு புகைப்பட வாக்காளர் சீட்டினை மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், பொதுப்பார்வையாளர் செல்வி அல்கா ஸ்ரீவஸ்தவா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (12.12.2017) வார்டு–40, திருவள்ளுவர் நகர், இளையா தெரு, டி.என்.இ.பி. குடியிருப்பில் வழங்கினார்.

எண்.11, டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தலில் 59 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இச்சட்டமன்ற தொகுதியில் உள்ள 38, 39, 40, 41, 42, 43 மற்றும் 47 ஆகிய வார்டுகளுக்குட்பட்ட 50 இடங்களில் 258 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு 1,10,903 ஆண் வாக்காளர்களும், 1,17,232 பெண் வாக்காளர்களும், 99 இதர வாக்காளர்கள் என மொத்தம் 2,28,234 வாக்காளர்கள் 21.12.2017 அன்று காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்களிக்க உள்ளனர்.

வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள சீட்டு வழங்கும் பணி மண்டல தேர்தல் அலுவலர்கள், மண்டல உதவி தேர்தல் அலுவலர்கள், 21 மேற்பார்வையாளர்கள், 7 பொறுப்பு அலுவலர்கள் மற்றும் 258 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் தற்பொழுது நடைபெற்று வருகிறது. இப்பணியினை 17.12.2017க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வாக்காளர் அடையாள சீட்டில் வாக்காளரின் பெயருடன் புகைப்படம், பாலினம், தந்தை/ கணவர் பெயர், சட்டமன்ற தொகுதியின் பெயர், பாகம் எண், வாக்காளர் அடையாள அட்டை எண், வரிசை எண், மையத்தின் எண், வாக்குப்பதிவு நடைபெறும் நாள் மற்றும் முகவரி இடம்பெற்றிருக்கும். மேலும், வாக்காளர் புகைப்பட அடையாள சீட்டின் பின்புறம் வாக்காளர்களுக்கு பயன்படும் வகையில் வாக்குச்சாவடி நிலை அலுவலர் பெயர் மற்றும் கைபேசி எண்ணுடன் வாக்குப்பதிவு முடிவடையும் நேரத்தில் (மாலை 5 மணிக்குள்ளாக) வரிசையில் நிற்கும் அனைத்து வாக்காளர்களும் தங்கள் வாக்குகளை பதிவு செய்ய அனுமதிக்கப்படுவர் எனவும், பெண்களுக்கு தனியே வரிசை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், மூத்த குடிமக்களுக்கு வாக்களிக்க முன்னுரிமை தரப்படும் எனவும்,

பார்வையற்ற மற்றும் இயலாத நிலையில் உள்ள வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை பதிவிட வயது வந்த நபரை தங்களுடன் வாக்குப்பதிவு அடைப்புக்குள் அழைத்துச் செல்ல அனுமதி அளிக்கப்பட்டுள்ளது குறித்தும், கைபேசி மற்றும் புகைப்பட கருவி போன்ற மின்னணு இயந்திர கருவிகளை வாக்குச்சாவடிக்குள் பயன்படுத்தக் கூடாது என்றும், குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களிக்க பணம் கொடுப்பதும், வாங்குவதும் அல்லது வேறு எந்த வகையிலும் பயன்பெறுவது சட்டப்படி குற்றமாகும் போன்ற வாசகங்கள் இடம் பெற்றுள்ளது. மேலும், ஒவ்வொரு வாக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை கருத்தில் கொண்டு எந்த ஒரு வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது என்பதற்காக தாங்கள் வாக்களிக்க வேண்டிய வாக்குச்சாவடி மையம் எங்கு அமைந்துள்ளது என்பதனை இணையதளத்தின் வாயிலாகவும் கண்டறியும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சீட்டினை வாக்களிப்பதற்கு ஆவணமாக பயன்படுத்தலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.பிரவீண் பி. நாயர், இ.ஆ.ப., மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர் / துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி.ஆர்.லலிதா, இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி எஸ்.பிரியதர்ஷினி, இ.ஆ.ப., உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**